**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC 118/2022**

**வழக்கு சாட்சி :PW2 (LW5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | விவசாயம் |
| தந்தை பெயர் | : | வேலன் | சமயம் | : | |
| கிராமம் | : | புலவன்பட்டி | வயது | : | 49 |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru.Veeramanikandan , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**(எதிரி ஆஜரில்லை, மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது)**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 06th day of July 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Adthar Card of the Witness verified.**

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–**

1. நான் புலவன்பட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 ஆவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை நான் மருத்துவமனையில் பிரேத விசாரணை அறிக்கையின்போது இருந்தபோது போலீசார் கேட்டுகொண்டதற்காக போட்டு கொடுத்தேன். வேறு விவரங்கள் எனக்கு தெரியாது. **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**( சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. கடந்த 11.03.2022 ஆம் தேதி இலுப்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர், இலுப்பூர் காவல் நிலைய குற்ற எண் 47/2022 என்ற வழக்கின் சம்பவயிடத்தை எங்கள் முன்னிலையில் ஆய்வு செய்து, வரைபடம் வரைந்து, மகஜர் தயார் செய்யததாகவும்,அதில் நானும், ராசு என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்பொழுது வழக்கு பற்றி எதுவும் தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு

சாட்சி அதை படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி
என்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இலுப்பூர் .**